www.Padasalai.Net www.TrbTnpsc.com

TRICHY

# முதல் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2019

TC

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## பொதுத்தமிழ்

நேரம்: 1.30 மணி மதிப்பெண்கள்: 50

I. பலவுள் தெரிக: 12 x 1 = 12

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பெருங்கலக் காரிகை ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்
   அ) ஒளிப்பறவை ஆ) சூரிய நிழல்
   இ) ஒரு கிராமத்து நதி ஈ) நிலவுப் பூ
3. எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
   சக்தி பிறக்குது மூச்சினிலே.
   என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது
   அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை
   இ) தாய்வழிச் சமூக முறை ஈ) தந்தைவழிச் சமூக முறை
4. குகப்படலம் இடம்பெறும் காண்டம் எது?
   அ) அயோத்தியா காண்டம் ஆ) ஆரண்ய காண்டம்
   இ) கிட்கிந்தா காண்டம் ஈ) யுத்த காண்டம்
5. குடும்பம் என்னும் நூல் முதன்முதலில் இடம்பெற்ற நூல்
   அ) நாலடியார் ஆ) தொல்காப்பியம்
   இ) திருக்குறள் ஈ) சிலப்பதிகாரம்
6. 'ஓங்கலிடை' என்ற தண்டியலங்காரப் பாடலில் அமைந்துள்ள அணி
   அ) சொல் வேற்றுமை அணி ஆ) பொருள் வேற்றுமை அணி
   இ) சொல் பின்வருநிலையணி ஈ) பொருள் பின்வருநிலையணி
7. இளந்தம்பதியரை நெறிப்படுத்தும் பணிக்குரியவர்
   அ) நற்றாய் ஆ) தோழி
   இ) செவிலித்தாய் ஈ) தந்தை
8. எல்லா இடங்களிலும் ___________ எழுத முடியாது.
   அ) தனித்தமிழை ஆ) பேச்சுத்தமிழை
   இ) பழங்காலத் தமிழை ஈ) மரபுத் தமிழை
9. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
   அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
   இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்
10. சடாயு யாருடைய நண்பன்?
    அ) குகன் ஆ) இராமன் இ) தயரதன் ஈ) அருணன்
11. உரிமைத் தாகம் என்னும் சிறுகதை எடுத்துரைப்பது
    அ) நிலத்துடனான உறவு குடும்ப உறவை வலுப்படுத்துவதை
    ஆ) வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட இழப்புகள்
    இ) முதலாளித்துவம் தொழிலாளிகளை நசுக்குவதை
    ஈ) இவற்றில் எதுவுமில்லை
12. 'சிறியோரை இகழ்தல் இலமே' - என்று சுட்டப்படுவது
    அ) தமிழ்ப்பண்பின் தொடர்ச்சி ஆ) தமிழர் உயிர்ப்பண்பின் முதிர்ச்சி
    இ) தமிழர் நற்பண்பின் மலர்ச்சி ஈ) தமிழர் நற்பண்பின் வளர்ச்சி

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**II. குறுவினா (எவையேனும் மூன்றனுக்கு)** 3 x 2 = 6

13. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
14. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை?
15. இயல்பு வழக்குகளை கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?
16. எழுத்துப் பிழைக்கு முதன்மையான காரணம் யாது?
17. நெடுநல்வாடை - பெயர்க்காரணம் தருக.

**III. மொழிப்பயிற்சி, இலக்கணப் பயிற்சி:** 3 x 2 = 6

18. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.
    அ) வானமெல்லாம் ஆ) வெங்கதிர்
19. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    அ) உயர்ந்தோர் ஆ) பொலிந்தான்
20. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருள் யாவை?
21. *தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக:*
    நம் மாநிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.
22. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.*
    அ) பலகை ஆ) கோவில்
23. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:*
    இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சிக்கோ.

**IV. சிறுவினாக்கள்:** 2 x 4 = 8

24. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

    ***(அல்லது)***

    சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமைகளை எழுதுக.
25. பேரிடர் வந்து விட்டால் மேற்கொள்ள வேண்டியவை யாவை?

    ***(அல்லது)***

    சங்க இலக்கிய நூல்களின் துணைக்கொண்டு தாய்வழிக் குடும்பம் பற்றி எழுதுக.

**V. நெடுவினா (இரண்டினுக்கு மட்டும்):** 2 x 6 = 12

26. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விவரிக்க.
27. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவுநிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.
28. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**VI. அடி மாறாமல் செய்யுள் வடிவில் விடை தருக:** 4 + 2 = 6

29. 'ஓங்கலிடை வந்து' என்று தொடங்கும் தண்டியலங்காரப் பாடல்
30. 'மகற்கு' - என முடியும் குறள்.

******

Scanned by CamScanner